1982 ஏப்ரல் 7]

மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம்.

*வினா எண் 789—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட மதுராந்தகம் பெரிய ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் பெரிய ஏரியை தூர்வாரி பண்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, மதுராந்தகம் பெரிய ஏரியை தூர்வாரும் பணி பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சுமார் 157 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரித்து, நீர் நிர்வாக ஆணையாளர் மூலம் அரசுக்கு இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு இதுகுறித்து விரைவில் முடிவு எடுக்கும்.

வெள்ளாற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

*வினா எண் 790—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றின் இரு கரைகளிலும் சேத்தியா தோப்பிலிருந்து பரங்கிப்பேட்டை முகத்துவாரம் வரை தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ள வெள்ளாற்றில் சேத்தியாதோப்பு அணைக்கட்டுக்குக் கீழிருந்து புவனகிரி பாலம் வரை வெள்ளத் தடுப்புக்கரை அமைப்பதற்கான செயற்குறிப்பும் மற்றும் மதிப்பீடும் தொடர்ந்து புவனகிரி பாலத்திலிருந்து வங்காள விரிகுடா வரை வெள்ளத் தடுப்புக்கரை கட்டுவதற்கான மற்றொரு செயற்குறிப்பும் மற்றும் மதிப்பீடும் அரசின் பரிசீலனையில் உள்ளன.